**செய்தி வெளியீடு எண்:295** **நாள்:18.06.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

கோவிட்–19 நோய் தொற்றின் காரணமாக காடுகள், புலிகள் சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் வன விலங்கு சரணாலயங்களில் உள்ள விலங்குகளுக்கு மேற்கண்ட நோய்த்தொற்றுகளைத் தடுக்கவும், குறைக்கவும் மற்றும் மேற்கண்ட பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்க, தமிழ்நாடு அரசு, திருமதி. சுப்ரியா சாகு., இ.ஆ.ப., முதன்மை செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத் துறை அவர்களின் தலைமையில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், சிறப்பு செயலாளர் (வனம்), சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் – வனத் துறை, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர், மேம்படுத்தப்பட்ட வனஉயிரின பாதுகாப்பு நிறுவனம், திரு. R. சுந்தரராஜு, இ.வ.ப., (ஓய்வு), முன்னாள் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் மற்றும் திரு. S. தியடோர் பாஸ்கரன், வனவிலங்கு பாதுகாவலர் ஆகியோர்களை உள்ளடக்கிய ஆறு உறுப்பினர்களைக் கொண்ட மாநில அளவிலான பணிக் குழு (State Level Task Force) ஒன்றினை அமைத்துள்ளது. இப்பணிக்குழு நோயின் பரவலைக் கண்காணித்தல், தடுப்பூசி வழங்குதல் மற்றும் தொடர்புடைய துறைகளின் பணிகளை உன்னிப்பாக கண்காணித்து தொடர் அறிக்கையினை சமர்ப்பிக்கும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**